விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 25
ஒலி 339 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 07 வெள்ளிக்கிழமை (22.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829





## யாழில் அடை மழை



### 610 குடும்பங்கள் பாதிப்பு
### 20 வீடுகள் பகுதியளவில் சேதம்

(யாழ்ப்பாணம்)
யாழில் நேற்றுத் தொடர்ச்சியாகப் பெய்த அடை மழை காரணமாக 610 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 20 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.
(02ஆம் பக்கம் பார்க்க)

## துயிலுமில்லங்களில்
## மாவீரர் வார நினைவேந்தல்

02

### பாராளுமன்றத்தின் முதல் நாளே
## சர்ச்சையைக் கிளப்பிய
### மருத்துவர் அர்ச்சுனா இராமநாதன்

(கொழும்பு)
மருத்துவர் அர்ச்சுனா இராமநாதன் பாராளுமன்றத்தின் முதல் நாளே எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனத்தில் அமர்ந்ததால் சர்ச்சை நிலை உருவாகியது.
10ஆவது பாராளு 11

## வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு
### மழைக்கு வாய்ப்பு

(கொழும்பு)
தென்கிழக்கு வங்கக்கடலில் நவம்பர் 23ஆம் திகதி குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளது.
அதன்பின், அடுத்த 2 நாட்களில் 11

### பருவகால மழை
## ஆளுநர் தலைமையில் இன்று கலந்துரையாடல்


(யாழ்ப்பாணம்)
பருவகால மழை மற்றும் இடர் தணிப்புத் தொடர்பில் வடக்கு ஆளுநர் தலைமையில் இன்று முன்னாயத்த கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.
வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் இன்று காலை 10 மணிக்கு வடக்கு மாகாண ஆளுநர் 11

### இனவாத, மதவாத
# அரசியலுக்கு மீண்டும் இடமளிக்க மாட்டோம்
### கொள்கைப் பிரகடன உரையில் அநுர



(கொழும்பு)
இனவாத, மதவாத அரசியலுக்கு மீண்டும் இடமளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
10ஆவது பாராளுமன்றத்தில் தனது கொள்கைப்பிரகடன உரையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், 02

## தமிழ் மக்களின் அரசியல் தீர்வு இந்தியாவின் நிலைப்பாடு என்ன?



இந்திய உயர்ஸ்தானிகருடன் தமிழரசுக் கட்சி எம்.பிக்கள் கலந்துரையாடல்

(கொழும்பு) தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பது தொடர்பில் 11

## இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு நடவடிக்கை
### கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்



(கொழும்பு)
இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் 11

## அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும்
### ஜனாதிபதி அநுர

(கொழும்பு)
வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
பாராளுமன்றத்தில் நேற்று கொள்கைப் பிரகடன உரையின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு 02

## இஸ்ரேலிய பிரதமருக்கு பிடியாணை



11

### வட்டுக்கோட்டையில்
## மோ.சைக்கிள் விபத்து குடும்பஸ்தர் மரணம்


(யாழ்ப்பாணம்)
வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இதில் அராலி மத்தி வட்டுக்கோட்டையைச்சேர்ந்த மகேஸ்வரன் இராமதாஸ் (வயது-48) என்ற இரண்டுபிள்ளைகளின் தந்தையே 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 10 ஆவது பாராளுமன்றின் கன்னி அமர்வின் சில காட்சிகள்








## யாழில்...

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் ஏனைய அனர்த்தங்களால் 610 குடும்பங்களை சேர்ந்த 2294 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 20 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனைத்து முகாமைத்துவ பிரிவின் பிரதிப்பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில்,

சாவகச்சேரி பிரதேசசெயலர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தினால் இதுவரை 34 குடும்பங்களைச் சேர்ந்த 108 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஏழு வீடுகளும் பகுதியளவில் சேதம் அடைந்துள்ளன.

ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவில் 111 குடும்பங்களை சேர்ந்த 475 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 10 குடும்பங்களை சேர்ந்த 35 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் எட்டு வீடுகளும் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தம் மற்றும் இடி மின்னல் தாக்கத்தால் 5 குடும்பங்களைச் சேர்ந்த 14பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதி அளவில் சேதமடைந்துள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் ஏழு குடும்பங்களை சேர்ந்த 21 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் 174 குடும்பங்களை சேர்ந்த 641 பேர் வெள்ள அனர்த்தினால் பாதிக்கப்பட்டுள்ளதோடு வீடு ஒன்றும் பகுதியளவில் சேதம் அடைந்துள்ளது.

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 18 குடும்பங்களை சேர்ந்த 68 பேர் வெள்ள அர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 145 குடும்பங்களை சேர்ந்த 494 பேர் வெள்ள அர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மூன்று குடும்பங்களை சேர்ந்த 14 பேர் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதி அளவில் சேதமடைந்துள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 103 குடும்பங்களை சேர்ந்த 424 பேர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை
திருமதி **நிறஞ்சினி யோகசீலன்** அவர்களின்
அன்பு மாமியார்

### திருமதி தியாகராசா லோகேஸ்வரி

அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(2480)

சேவையாளர் சங்கம்
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி


## முன்னாள் அமைச்சர் டக்ளஸிற்கு பிடியாணை

முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டுள்ளார்.

குறித்த பிடியாணை நேற்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வெள்ளவத்தையைச் சேர்ந்த வர்த்தகர் இரண்டு கோடி ரூபாய் பெறுமதியான காசோலைகளை வழங்கி மோசடி செய்ததாக டக்ளஸ் தேவானந்தா செய்த முறைப்பாட்டின் பிரகாரம், டக்ளஸ் தேவானந்தா நீதிமன்றத்தில் முன்னிலையாகாத காரணத்தினால் இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் டக்ளஸ் தேவானந்தா நோய்வாய்ப்பட்டிருப்பதால் அவர் நீதிமன்றில் முன்னிலையாக மாட்டார் என அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

எனினும் டக்ளஸ் தேவானந்தாவின் சுகவீனம் தொடர்பான மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் கொழும்பு மேலதிக நீதவான் விசாரணையை ஜனவரி 23 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ம-7)

## அரசியலுக்கு...

மக்களுக்கு நாட்டின் நீதித்துறை மீது அவ நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

நீதித்துறை மீதான மக்களின் நம்பிக்கை கட்டியெழுப்பப்படும். இதற்காக யாரையும் பழிவாங்கும் எண்ணம் இல்லாமல் அனைவரும் சுதந்திரமாக செயற்படும் வகையில் நீதித்துறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும்.

பொருளாதார நன்மைகள் மக்களிடையே நியாயமான முறையில் விநியோகிக்கப்பட வேண்டும்.இதற்காக சந்தை ஏகபோகங்கள் இல்லாதொழிக்கப்படும்.விவசாயம் எமது முதன்மையான பொருளாதார துறையாக மாற்றப்படும்.

இதற்கான சலுகைகள் அதிகரிக்கப்படும். நாட்டை ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நகர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி தொடர்பான 3 ஆவது பணியாளர் மட்ட உடன்படிக்கையை சனிக்கிழமைக்குள் கைச்சாத்திட அரசாங்கம் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (ம-7)

## மாவீரர்...

ஈழத் தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடி மண்ணில் வித்தாகிய வீரமறவர்களை நினைவேந்தும் மாவீரர் வாரம், நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில், கொட்டும் மழைக்கு மத்தியிலும் மாவீரர் துயிலுமில்லங்களில் மாவீரர்களுக்கு ஈகச்சுடர் ஏற்றி, உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதற்கமைய யாழ்ப்பாணம் சாட்டி மாவீரர் துயிலும் இல்லம் விசுவமடு தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்திலும் பொதுச்சுடர் ஏற்றி உணர்வெழுச்சியுடன் மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

கார்த்திகை மாதம் 27 ஆம் திகதியை மாவீரர் தினமாகக்கொண்டு மாவீரர்களின் உயர் தியாகத்தினை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கும் வகையில் மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்படும் நிலையில் இவ்வாரம் முழுவதும் தமிழர் தாயகத்திலும் தமிழர் புலம்பெயர் தேசங்களிலும் உள்ள வீரமறவர்கள் விதைக்கப்பட்ட மாவீரர் துயிலுமில்லங்களில் அகவணக்க நினைவேந்தல் நிகழ்வுகளும் மாவீரர் நினைவெழுச்சி நிகழ்வுகள், வீர மறவர்களின் உறவுகளுக்கான கௌரவிப்பு நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன. (ம-7)

## அரச ஊழி...

குறிப்பிட்டார். வலுவான அரச சேவையின்றி நாடு ஒருபோதும் முன்னோக்கி செல்ல முடியாது எனவும் ஜனாதிபதி இதன்போது கூறினார்.

மேலும், ஆண்டு வரவு - செலவு திட்டத்தின் ஊடாக அஸ்வெசும நலன் புரி கொடுப்பனவு அதிகரிக்கப்படும் என ஜனாதிபதி இதன்போது சுட்டிக் காட்டினார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சபாநாயகராக அசோக சபுமல் ரன்வல



(கொழும்பு)

பாராளுமன்றத்தின் புதிய சபாநாயகராக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக சபுமல் ரன்வல ஏகமனதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

பத்தாவது பாராளுமன்றத்தின் ஆரம்ப அமர்வின் ஆரம்பத்தின் போது பிரதமர் ஹரிணி அமரசூரியவினால் அவர் பரிந்துரைக்கப்பட்டார்.

இந்த யோசனையை அமைச்சர் விஜித ஹேரத் ஆதரித்தார்.

இலங்கையின் 10 ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு நேற்று இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# கண் குறைபாடுகள் சிறுவரிடையே அதிகரிப்பு

## கண் வைத்திய நிபுணர்

(கொழும்பு)

இலத்திரனியல் திரை பாவனையினால் சிறுவர்கள் மத்தியில் கண் குறைபாடுகள் அதிகரித்து வருவதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் கண் வைத்திய நிபுணவர் வைத்தியர் அனுஷா தன்னேகும்புர தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக, கிட்டப் பார்வை அல்லது தூரப்பார்வை குறைபாடு அதிகரிக்கும் போக்கு இருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே வைத்தியர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி-8)

# எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாச



(கொழும்பு)

10ஆவது பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவை ஏற்றுக்கொள்வதாக நேற்று பாராளுமன்றில் சபாநாயகர் அறிவித்துள்ளார். (நி-8)

# பிரதி சபாநாயகராக மொஹமட் ரிஸ்வி சாலி



(கொழும்பு)

பிரதி சபாநாயகராக மொஹமட் ரிஸ்வி சாலி நியமிக்கப்பட்டுள்ளார்.

10 ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. இதன்போது, பிரதி சபாநாயகர் நியமிக்கப் பட்டார். (நி-8)

# பாராளுமன்ற அடுத்த அமர்வு டிசம்பர் 3 இல்

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் அடுத்த அமர்வு டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறும்.

10 ஆவது பாராளுமன்ற கூட்டத் தொடரில் கொள்கை பிரகடன உரையைத் தொடர்ந்து அடுத்த அமர்வுக்காக டிசம்பர் 3 ஆம் திகதி வரை பாராளுமன்றத்தை ஒத்தி வைத்தார் ஜனாதிபதி. (நி-8)


யா/கோப்பாய் மகாவித்தியாலய அதிபர் சு.மோகனராஜன் அவர்களின்

# மணிவிழா சிறப்பு மலர்

### குருவின் ஆசிச் செய்தி



திரு.சு. மோகனராஜன் அவர்கள் வீட்டுப்பாடம், பள்ளிப் பாடம் இரண்டிலுமாக உளன்று இருந்த காலத்தில் ஒன்று அவரை விடுவித்தது என்றே கூறுவேன். காலம் காட்டிய வயதுக் கணக்கில் பாடசாலைக் கணக்கு தீர்வடைகின்றது.

அவர் தம் சேவைக் காலத்தில் இப் பாடசாலையில் ஆற்றிய சேவைகள் அளப்பரியது. அவரின் சேவைகளால் பாடசாலைகளிலும் மாணவர் வாழ்விலும் நிகழ்ந்த அபிவிருத்திகள் எமக்கு கண்கூடாகத் தெரிபவை. மோகனராஜன் அவர்களின் ஓய்வுக்குப் பின்னரான மீதமுள்ள காலத்தினை குடும்பத்தாரும் சுற்றத்தாரும் தானும் இன்புற்று இருக்க மகிழ்ச்சிப் பூக்களின் வரவேற்புடன் இன்பத்துடன் கழிக்க எல்லாம் வல்ல கற்பக விநாயகனை வேண்டுகின்றோம்.

'கற்பக விநாயக கிரியா உபாசகர்'
சிவஸ்ரீ. பா.செல்வ சேனக் குருக்கள்.
பிரதமகுரு, தென்கோவை கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானம், இருபாலை, கோப்பாய்.

### வாழ்த்துச் செய்தி




34 வருடங்கள் சேவையாற்றி சேவையில் உயர்ந்து இன்று ஓய்வு பெறும் எமது மணிவிழா நாயகன் திரு.சுப்பையா மோகனராஜன் அவர்கள் எமது பாடசாலைக்குக் கிடைத்த மிகப்பெரிய சொத்து. அறிவிலும் அனுபவத்திலும் பல்துறை விற்பனராக திகழ்ந்த அதிபர் அவர்கள் ஆசிரியர்களுக்கு ஏற்படும் சிக்கலைத் தீர்ப்பதில் தனது அனுபவத்தையும் மனித நேயத்தையும் கொண்டு ஆர்ப்பாட்டம் இல்லாமல் மிகவும் அமைதியாக எல்லோரும் விரும்பும் தீர்வினைப் பெறுவதில் அவருக்கு நிகர் அவரே தான்.

பதவி உயர்வில் ஆர்ப்பாட்டம் செய்யும் அதிகாரிகள் இருக்கும் சமகாலத்தில் மிகவும் சாந்தமாக சினேகபூர்வமாக எல்லோருடனும் உறவாடும் எமது அதிபரின் எச்சங்கள் உச்ச நிலையில் இருப்பதை நாம் யதார்த்தமாகக் காண்கிறோம். அவர் அதிபர் பணியில் இருந்து ஓய்வு பெற்றாலும் எமது பாடசாலைக்கும் மாணவச் செல்வங்களுக்கும் கல்விச் சமூகத்திற்கும் நல்ல உதாரணமாக திகழ்ந்து குடும்பத்தாருடன் சுற்றம் சூழ நல் மனிதனாக பல்லாண்டு வாழ ஆசிரியர் நலன்புரிக்கழகம் சார்பாக வாழ்த்துகின்றோம்.

"வாழ்க வளமுடன்"

தலைவர், ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கோப்பாய் மகாவித்தியாலயம்.



## திரு. சுப்பையா மோகனராஜன் (J/P)

B.A Hons (ECON) M.E.D. PGDE
PGDEM (MERIT) SLPS-I

### சேவை விபரம்

15.03.1990-16.02.2003- ஆசிரியர். மு/விசுவமடு ம.வி
17.02.2003-02.09.2007- ஆசிரியர். யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி
03.09.2007-18.02.2010- பதில் அதிபர். யா/பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம்
19.02.2010-29.04.2014- அதிபர். யா/பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தி
30.04.2014-12.08.2020 -அதிபர். யா/ அச்செழு சைவப்பிரகாசம் வித்தி
13.08.2020-22.11.2024- அதிபர். யா/ கோப்பாய் ம.வி
ஆசிரியர் சேவை-17 வருடங்கள்
அதிபர் சேவை-17 வருடங்கள்
மொத்த சேவைக்காலம் 34 வருடங்கள் (2472)

### வாழ்த்துச் செய்தி



எமது பாடசாலையில் கடந்த நான்கு வருடங்களாகக் கடமையாற்றி தற்போது ஓய்வினைப் பெற்றிருக்கும் எமது அதிபர் திரு. சு. மோகனராஜன் அவர்களின் பணி மகத்தானது. இப் பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் மற்றும் இணைபாடச் செயற்பாடுகளின் வளர்ச்சியில் அதீத அக்கறை காட்டி பாடசாலையின் அபிவிருத்திக்குப் பெரிதும் பங்காற்றிய பெருமை இவரை சாரும். தன்னுடன் பணி ஆற்றும் சக பணியாளர்களை மதித்து இன்முகத்துடன் பழகும் நேர் மனப்பாங்கு கொண்ட எங்கள் அதிபரின் ஓய்வுக்காலம் சிறக்க எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

றோ. சிவபுத்திரன்,
பதில் அதிபர். யா/கோப்பாய் மகா வித்தி

### யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



திரு. சு.மோகனராஜன் அவர்கள் 17 வருடங்கள் ஆசிரியராக இரண்டு பாடசாலைகளிலும், 17 வருடங்கள் அதிபராக மூன்று பாடசாலைகளிலும் கல்விப் பணிசெய்த காலங்கள் 34 வருடத்தினை ஆசிரிய, அதிபர் சேவையாற்றி அமைதியான சுபாவத்தினால் எல்லோர் மனங்களிலும் நிறைந்து நிற்கின்றார்.

சாந்தமான தோற்றத்தினையும் கனிவான பேச்சினையும் வெள்ளை உள்ளம் கொண்ட சுப்பையா மோகனராஜன் அவர்கள் அதிபர் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் ஓய்வு காலத்தில் சந்தோசமாக நீண்ட ஆயுள், ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்று எல்னாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

திருமதி.ஜமுனா ராஜசீலன்,
வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

### வாழ்த்துச் செய்தி



பல்கலை பயின்று பற்பல பிரதேசங்கள் சென்று தம்பணி தொடர்ந்து இன்று எம் வலயத்தில் ஓய்வினைப் பெற்று நிற்கும் அதிபர் திரு.சு.மோகனராஜன் அவர்கள் என்றும் கனிந்த முகத்துடன் இனிமையாகப் பேசும் சுபாவம் கொண்டவர். பல்துறை சார்ந்த அறிவினை நிறையவே பெற்று பள்ளி மாணவர்களின் புத்தியைத் தீட்டியவர். தன்னாலான பணிகளை பாடசாலைக்கும் சமூகத்திற்கும் செய்து விட்டு இன்றைய தினம் ஓய்வினைப் பெற்றுக்கொள்ளும் இவரது ஓய்வுக்காலம், சீரும் சிறப்பும் பெற்று, நோய்நொடி இன்றி சிறப்புற வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

V.சாரங்கன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், கோப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தேசிய மட்டத்தில் சம்பியனான மகாஜன மகளிர் அணி



இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட 16 வயதுப் பிரிவிற்குட்பட்ட பெண்களுக்கான உதைபந்தாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி சம்பியனானது.

நேற்று முன்தினம் அநுராதபுரம் பொது விளையாட்டரங்கில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மகாஜனக் கல்லூரியை எதிர்த்து காலி மாவட்ட ஹீனற்றிலை ஷரிபுத்திர கல்லூரி மோதியது.

இதில் மகாஜனக் கல்லூரி அணி 2-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்று தேசிய மட்ட சம்பியனாகியமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3265

Search for people, places and things

**மதுமிதன்**




**கஸ்மினா**




**மிதுனா**




**வனிதா**




**பிரசாந்**




**சிவர்சன்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைடனின் அடுத்த அதிரடி தீர்மானம் உக்ரைனிற்கு கண்ணிவெடிகளை வழங்க

## அமெரிக்கா முடிவு



(வோஷிங்டன்)

உக்ரைனிற்கு நிலக்கண்ணி வெடிகளை வழங்குவதற்கு அமெரிக்க ஜனாதிபதி அனுமதியளித்துள்ளார்.

உக்ரைனில் ரஷ்ய படையினரின் முன்னேற்றத்தை தடுப்பதற்காக அமெரிக்கா உக்ரைனிற்கான இராணுவ உதவிகளை தீவிரப்படுத்தியுள்ள நிலையிலேயே கண்ணிவெடிகளை வழங்குவதற்கு ஜோ பைடன் அனுமதி வழங்கியுள்ளார்.

பொதுமக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் இந்த நிலக்கண்ணி வெடிகளை பயன்படுத்தப்போவதில்லை என உக்ரைன் உறுதியளித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் குறிப்பிட்ட காலம்வரை செயற்பாட்டில் இருக்கும் விதத்திலேயே கண்ணிவெடிகளை பயன்படுத்தப்போவதாகவும் உக்ரைன் உறுதியளித்துள்ளது.

நிலக்கண்ணி வெடிகள் தொடர்பான ஜோபைடனின் தீர்மானத்தை உக்ரைன் படையினர் வரவேற்பார்கள் ஆனால் உலகின் ஏனைய பகுதிகளில் இது மிகவும் சர்ச்சைக்குரியதாக காணப்படும் என சர்வதேச ஊடகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவை பொறுத்தவரை இது மிகவும் முக்கியமான கொள்கை மாற்றம். ( நி-8)

# வடகொரியாவுக்கு பரிசாக விலங்குகளை வழங்கிய ரஷ்யா

(பியாங்யாங்)

வடகொரிய தலைநகர் பியாங்யாங்கில் அமைந்துள்ள உயிரியல் பூங்காவிற்கு ஆபிரிக்க சிங்கம், இரண்டு பழுப்பு நிறக் கரடிகள் உட்பட 70 இற்கும் மேற்பட்ட விலங்குகளை ரஷ்யா பரிசாக வழங்கியுள்ளது.

மொஸ்கோவுக்கும் பியாங்யாங்கிற்கும் இடையிலான உறவின் அண்மைய முன்னேற்றகர நிகழ்வாக இது அமைந்துள்ளது.

ஜனாதிபதி விளாடிமிர் புடின் தலைமையிலான ரஷ்ய அரசாங்கத்தின் சுற்றுச்சூழல் அமைச்சர் அலெக்சாண்டர் கோஸ்லோவ், சரக்கு விமானத்தில் வட கொரிய தலைநகருக்கு விலங்குகளை கொண்டு வந்தார் என்று கோஸ்லோவின் அலுவலகம் நேற்று முன்தினம் புதன்கிழமை அதன் அதிகாரப்பூர்வ டெலிகிராம் சேனலில் தெரிவித்தது.

உக்ரைனில் ரஷ்யாவுடன் இணைந்து போரிட வட கொரியா ஆயிரக்கணக்கான படையினரை அனுப்பியதை அமெரிக்காவும் தென்கொரியாவும் வெளிப்படுத்திய சில வாரங்களுக்குப் பின்னர் இந்த பரிசு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

லங்கா மஹறால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
### கல்லைவேம்படி வீதி, இல 5810 வட்டாரம்-07

வலிகாமம் மேற்குபிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 07 கல்லைவேம்படி வீதியிலுள்ள இல: 58/10 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் **சின்னத்தம்பி கைம்பெண் சின்னப்பிள்ளை** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **தாமு சின்னத்தம்பி பெண் சின்னப்பிள்ளை** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு R.கந்தையா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 957/20.02.1926ஆம் இலக்க உறுதியால் **கதிரவேலு கணபதியும் பெண் சேதுமையும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**நாகநாதன் கைம்பெண் பத்மாதேவி** ஆகியவர் குறித்த ஆதனத்திற்கு தனது கணவரின் பேர்த்தியார் தாமு சின்னத்தம்பி கைம்பெண் சின்னப்பிள்ளை உரித்துடையவராக இருந்தார் என்றும் அவர் இவ்வாதனத்தை ஆவணப்படுத்தாமல் காலஞ்செல்ல அவரின் மகளாகிய தாமோதரம்பிள்ளை நாகம்மா ஆட்சி செய்து வந்தார் என்றும் அவரின் பின் அவரது மகனும் தனது கணவருமாகிய நாகநாதன் ஆட்சி செய்து வந்தார் என்றும் அவரது ஆட்சியில் எவ்வித தலையீடோ, குறுக்கீடோ இருந்ததில்லை என்றும் 2019ஆம் ஆண்டில் தனது கணவர் காலஞ்செல்ல தானே குறித்த ஆதனத்தை ஆண்டனுபவித்து வருவதாகவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ச.தவகுணராஜசிங்கம் முகதாவில் 875/01.06.2023ஆம் இலக்கத்தில் பிரகடன உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

குறித்த ஆதனத்தினை **நாகநாதன் பிரசாந்தன்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வைரமுத்து சுபாஸ்கரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1289/24.09.2024ஆம் இலக்க உறுதியால் குறித்த **நாகநாதன் கைம்பெண் பத்மாதேவி** ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **நாகநாதன் பிரசாந்தன்** ஆகியவர் ஆதனத்தின் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **நாகநாதன் பிரசாந்தன்** ஆகியவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனத்தின் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம் .

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை,**

(2478)

# இராசிபலன்

22.11. 2024
கார்த்திகை7, வெள்ளிக்கிழமை
சப்தமிமுன்னிரவு 9.45 மணிவரை

ஆயிலியம் முன்னிரவு 9.43மணிவரை
சுபநேரம் 6.10-7.40மணிவரை
இராகுகாலம் - 10.40-12.10 மணிவரை

சந்திராஷ்டமம் - மூலம், பூராடம்

வளவன்

**மேஷம்** ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பயணங்களால் பலனுண்டு.

**ரிஷபம்** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், விடா முயற்சிக்கு இன்று வெற்றி கிட்டும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு , சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.

**சிம்மம்** எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், மாற்றத்தினால் ஏற்றமுண்டு, வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள்.

**கன்னி** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**துலாம்** செய் தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்** வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பூர்வீகச் சொத்துகள் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு தேவை, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் தேவை.

**மகரம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலாங்கும் நாள்.

**கும்பம்** கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், கடன் சுமை குறைய வழி வகை செய்வீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலலாம்.

**மீனம்** சடங்கு சம்பிரதாயங்களில் நாட்டம் கூடும், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**வாங்கும் போது நண்பன், கேட்கும் போது பகைவன் ஆவான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் கண்காட்சி பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டுத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் தாவர உற்பத்தியாளர்களுடன் இணைந்து ஆண்டு தோறும் நடத்தி வரும் மலர்க் கண்காட்சி நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவிருந்த நிலையில் மலர்க் கண்காட்சி புயலுடன் கூடிய மழை எதிர்பார்க்கப்படுவதன் காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது.

நேற்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாக இக்காலப்பகுதியில் புயலுடன் கூடிய மழை எதிர்பார்க்கப்படுவதாக வானிலை ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

இதன் காரணமாகவே இம் மலர்க்கண்காட்சி பிற்போடப்பட்டுள்ளது. மேலும் புதிய திகதி பின்னர் அறியத் தரப்படும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (6-8)



வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வலி.கிழக்கு பண்பாட்டு பெருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் கலை நிகழ்வுகளும் நடைபெற்றது. (படம்: சிவசாந்தன்)

# மீன்பிடி வான் புனரமைத்தல் தொடர்பிலான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

புதிதாக அமைக்கப்படவுள்ள மீன்பிடி வான் புனரமைத்தல் தொடர்பான கலந்துரையாடலானது யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

புதிதாக அமைக்கப்படவுள்ள மீன்பிடி வான் புனரமைத்தல் மற்றும் ஏற்கனவே உள்ள மீன்பிடி வான் திருத்துதல் தொடர்பான விடயங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. மேலும் இது தொடர்பான உரிய அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அதற்கான நிதியினைச் சிறந்த முறையில் பயன்படுத்துதல் தொடர்பாகவும் அரசாங்க அதிபர் அவர்களால் உரிய தரப்பிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

இக்கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. ஸ்ரீமோகனன், தெல்லிப்பளை பிரதேச செயலாளர், கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர், கரையோரப் பாதுகாப்புத் திணைக்கள பொறியியலாளர், மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர், தெல்லிப்பளை மற்றும் சங்கானை பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்கள், UNDP நிறுவன பிரதிநிதிகள் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (6-8-33)

# பாதாளக்குழு சந்தேகநபரின் விளக்கமறியலை நீடிக்க

## உத்தரவிட்ட மன்று

(கரணவாய்)

பாதாளக்குழுத் தலைவர் கஞ்சிப்பானை இம்ரானின் முன்னாள் சகா என தெரிவிக்கப்படும் தமிழ் இளைஞர் ஒருவர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்ட போது வழக்கை விசாரித்த நீதவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை டிசம்பர் மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

பருத்தித்துறை பொலிஸாரால் கடந்த மே மாதம் 30 ஆம் திகதி ஹெரோயின் போதைப் பொருளுடன் வடமராட்சியைச் சேர்ந்த மேற்படி சந்தேக நபர் கைது செய்யப்பட்டு மே 31 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதை அடுத்து விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

குறித்த சந்தேக நபர், தான் பாதாளக் குழுவின் தலைவன் கஞ்சிப்பானை இம்ரானின் முன்னாள் சகா எனவும், அவருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாகப் பிரிந்து பூக்குடி கண்ணா என்பவருடன் இணைந்து செயற்பட்டு வந்ததாகவும், கஞ்சிப்பானை இம்ரானின் தந்தை மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பித்து யாழ்ப்பாணத்தில் தலைமறைவாகி இருந்ததாகவும் யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

மேற்குறித்த சம்பவங்களின் பின்னணியில் தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாகவும் சந்தேக நபர் தெரிவித்ததை அடுத்து விசேட அதிரடிப் படையினர், பொலிஸார் இணைந்து பலத்த பாதுகாப்புடன் பருத்தித்துறை நீதிமன்றத்திற்கு நேற்று முன்தினம் பகல் 12 மணியளவில் அழைத்து வரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-60)

# 12 இந்திய மீனவர்கள் நிபந்தனைகளுடன் விடுவிப்பு

(கரணவாய்)

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நெடுந்தீவு கடலில் வைத்து கைது செய்யப்பட்ட இராமேஸ்வர மீனவர்கள் 12 பேரை நிபந்தனைகளுடன் விடுவித்தும் ஏனைய நால்வருக்கு சிறைத் தண்டனை விதித்தும் ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி நெடுந்தீவு கடற் பரப்பில் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இலங்கை கடற்படையினரால் இரண்டு படகுகளுடன் கைது செய்யப்பட்ட 16 மீனவர்களின் வழக்கு நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி நளினி சுபாஸ்கரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி கைது செய்யப்பட்ட 16 மீனவர்களில் இருவர் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை காலத்தில் இரண்டாவது முறையாக இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளதால் அந்த இருவருக்கும் இரண்டு ஆண்டு சிறைத்தண்டனையும் ஒரு படகின் உரிமையாளரே ஓட்டுநர் என்பதால் அவருக்கு ஒரு வருட சிறை தண்டனையும், மற்றொரு படகின் ஓட்டுநருக்கு 6 மாத சிறை தண்டனையும் விதித்து உத்தரவிட்டார்.

அத்துடன் எஞ்சிய 12 மீனவர்களை 18 மாதகால சாதாரண சிறைத்தண்டனை விதித்து அதனை 10 வருடங்களுக்கு ஒத்தி வைத்து நிபந்தனையுடன் விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

இதையடுத்து விடுதலை செய்யப்பட்ட மீனவர்கள் 12 பேரும் யாழில் உள்ள இந்திய துணைத் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட மீனவர்கள் நால்வரும் மீண்டும் யாழ் சிறையில் அடைக்கப்பட்டனர். (6-8-60)


மாவீரர் வாரத்தின் ஆரம்பநாள் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று யாழ். [illegible] சாட்டி மாவீரர் துயிலும் இல்லம் மற்றும் விசுவமடு துயிலும் இல்லதிலும் ஈகைச்சுடர் ஏற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டிருந்தது. (படங்கள்: சிவசாந்தன், தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல்களை நிறுத்தக்கோரி ஜனாதிபதிக்கு கையெழுத்து மடல்

(மன்னார்)

**இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்களை உடனடியாக நிறுத்தக் கோரி கையெழுத்திடப்பட்ட தபாலட்டைகள் நேற்று ஜனாதிபதிக்கு முல்லைத்தீவு மக்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.**



கார்த்திகை 21 சர்வதேச மீனவர் தினமாகிய நேற்று சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் (ECDO) ஏற்பாட்டில் இந்திய இழுவைப் படகுகளை இலங்கை கடற்பரப்பிற்குள் வரவிடாது தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு கோரி, தபாலட்டைகள் முல்லைத்தீவு மக்கள், முல்லைத்தீவு மீனவர்களினால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மக்கள், மற்றும் மீனவர்களினால் பெயர், முகவரி பொறிக்கப்பட்டு கையெழுத்திடப்பட்ட தபாலட்டையில் இந்திய இழுவைப் படகுகளை இலங்கை கடற்பரப்பிற்குள் வரவிடாது தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு கோரி 500 இற்கு மேற்பட்ட தபாலட்டைகள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-299)

## பெண் ஒருவர் கைது

(குருமன்காடு)

லண்டனில் இருந்து வவுனியாவிற்கு வருகை தந்து சமூக வலைத்தளம் மூலம் நபர் ஒருவருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

லண்டனில் வசித்து வரும் பெண் ஒருவர், வெளிநாட்டில் இருந்து வவுனியாவிற்கு வந்து தற்போது குடியிருக்கும் நபர் ஒருவர் தனது வாகனத்தை தரவில்லை எனத் தெரிவித்து குறித்த பெண் அந் நபருக்கு எதிராக தொடர்ச்சியாக ரிக்ரொக் சமூக ஊடகத்தில் கருத்துக்களை பதிவிட்டு வந்திருந்தார்.

குறித்த நபர் நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு இருந்தார். இந்நிலையில், தேர்தல் முடிந்த பின்னர் குறித்த நபர் பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய குறித்த பெண் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த பெண்ணை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.(6-8-250)

## யாழில் தொடர்ச்சியாக திருட்டில் ஈடுபட்டு வந்த நபர் சி.சி.ரி.வியில் அடையாளம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தொடர்ச்சியாக முகக்கவசம் அணிந்து திருட்டில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவரை பொலிஸார் சி.சி.ரி.வி கமரா மூலம் அடையாளம் கண்டுள்ளனர்.

கோப்பாய் ,யாழ்ப்பாணம் பகுதிகளில் இரவு வேளையில் தொடர்ச்சியாகத் திருட்டில் ஈடுபட்டு வந்தவரே, இவ்வாறு சி.சி.ரி.வி கமராவில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த நபர் இரவு 1 மணி தொடக்கம் 3மணி வரையுள்ள இடைவெளியில் முகக்கவசம் அணிந்து சைக்கிளில் நடமாடுவதாகவும், இதுவரையான காலப்பகுதியில் 8 வீடுகளில் திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார் எனவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும் கடந்த வாரமளவில் யாழ். செட்டிதெரு வீதியிலும் திருட்டுச் சம்பவமொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

வங்கி , நிதி நிறுவனங்கள், கம்பெனிகளில் பணிபுரிவோர் மற்றும் வைத்தியர்களின் வீடுகளிலேயே இவ்வாறு திருட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளது.

எனவே பொதுமக்கள் இது குறித்து அவதானமாக இருக்குமாறும் சம்பவம் தொடர்பில் பொதுமக்கள் சந்தேகநபரை கைது செய்ய உதவுமாறும் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-8)

## சைவபரிபாலன சபை நடத்தும் நாவலர் பெருவிழா நாளை

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபை நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருவிழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.நீராவியடி சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தென்மராட்சி உதவி கல்விப் பணிப்பாளரும் சைவ பரிபாலனசபை உபதலைவருமான பி.என்.சுதர்சன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் திருமதி. ராஜசீலன் ஜமுனா, சிறப்புவிருந்தினராக யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை பேராசிரியர் சயனொளிபவன் முகுந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இளஞ் சைவப்புலவர் க.நித்திய பாபுதரன் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளதுடன் இந்துசாதனம் சஞ்சிகை வெளியீடு, மாணவர்களின் அரங்க நிகழ்வுகள் என்பன இடம்பெறும். (6-8)


கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு :1988-இந்து<br>நட்சத்திரம்:மூலம்<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்:A/L,Consumer Coordinator<br>எதிர்பார்ப்பு: படித்த நற்குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14928 | பிறப்பு -1991- இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>12இல் செவ்<br>கி.பா:19 1/2<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BioEngineer (gov)(Norway)<br>எதிர்பார்ப்பு:விவாகரத்தானவர்<br>தொ.இ: G/14954 |
| பிறப்பு:1992-இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா:25 3/4<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்:Bsc,Assistant Commissioner(gov)<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/14929 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>5 இல் சூரிசெவ்<br>கி.பா: 1 3/4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L,IELTS<br>எதிர்பார்ப்பு: தகுதியான வரன்<br>தொ.இ: G/14959 |
| பிறப்பு:-1991-இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>1இல் செவ்<br>கி.பா:11 3/4<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:Bsc,Civil Engineer(Australia)<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: B/14931 | பிறப்பு -1991- இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம்<br>2 இல் செவ்<br>கி.பா:35<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: Engineer<br>எதிர்பார்ப்பு:Engineer<br>தொ.இ: G/14960 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர்

637





பழுவேட்டரையரின் பொக்கிஷ நிலவறையிலிருந்து தப்பிச் சென்றவருக்கு இது ஒரு பிரமாதமா?" என்றாள்.

"அப்படியானால், நீங்களே கதவைத் திறந்து என்னை விடுதலை செய்யுங்கள்."

"நானே இந்தச் சிறையைத் திறந்து விடலாம். அல்லது நீரும் தப்பிச் செல்லலாம். ஆனால் இன்னொரு சிறைச்சாலையிலிருந்து நீர் தப்ப முடியாது."

"சின்னப் பழுவேட்டரையரின் பாதாளச் சிறையைச் சொல்கிறீர்களா?"

"இல்லை அதுவும் உமக்கு இலட்சியமில்லை. பாதாளச் சிறைவாசலில் காத்திருக்கும் புலிகளையும் வென்றுவிட்டுத் தப்பிச் சென்று விடுவீர்."

"பின்னே எந்தச் சிறையைச் சொல்கிறீர்கள்?"

"என்னுடைய இதயமாகிற சிறைச் சாலையைத்தான் சொல்கிறேன்."

தேவி! நான் வீடு வாசல் அற்ற அநாதை. என்னுடைய குலப் பெருமையெல்லாம் பழைய கதை, கவிஞர் கற்பனை. தாங்களோ, மூன்று உலகையும் ஒரு குடை நிழலில் ஆளும் சக்கரவர்த்தியின் செல்வக்குமாரி.

"யார் கண்டது? இந்தச் சோழ குலத்தின் பெருமையும் ஒருநாள் பழைய கதை ஆகலாம்."

ஆயினும், இன்றைக்குத் தாங்கள் இந்நாட்டில் இணையற்ற அதிகாரம் படைத்தவர். சக்கரவர்த்தியும், பழுவேட்டரையர்களும், முதல் மந்திரியும் தங்கள் விருப்பத்துக்கு மாறாக நடக்கத் துணியமாட்டார்கள்."

"இதெல்லாம் உண்மையாயிருந்தால், நீர்மட்டும் எவ்விதம் என் அதிகாரத்தை மீற முடியும்?"

"அரசாங்க அதிகாரம் வேறு விடயம். தாங்கள் நெஞ்சின் அதிகாரத்தையல்லவா குறிப்பிட்டீர்கள்."அதிலேதான் என்ன தவறு? நம் இருவருக்கும் அந்தஸ்திலே உள்ள வித்தியாசம்தான் தவறு."

"'அன்பிற்கும் உண்டோ , அடைக்கும் தாழ்' என்ற முதுமொழியைக் கேட்டதில்லையா?"

"அந்த முதுமொழி பொன்னியின் செல்வருக்கும் படகுக்காரி பூங்குழலிக்கும் கூடப் பொருந்துமல்லவோ?"

"ஆம்! பொருந்தும்தான்! என் தம்பி உலகமாளப் பிறந்தவன் என்று நினைத்தேன். அதனால் அவர்களுடைய நெஞ்சுக்கும் தாளிட விரும்பினேன்."

"நானும் இளவரசரைப் பற்றி எவ்வளவோ கேள்விப்பட்டு விட்டுத்தான் ஆவலுடன் வந்தேன். அவரோடு எட்டுத் திசைகளுக்கும் சென்று போர்க்களங்களில் வீரச் செயல்கள் புரிந்து பெயரும் புகழும் அடைய விரும்பினேன்."

"இப்போது அந்த ஆசை போய்விட்டதல்லவா?"

"ஆம் பொன்னியின் செல்வர் அரசுரிமையைக் காட்டிலும் அமைதியான வாழ்க்கையை அதிகம் விரும்புகிறார். போர்க்களத்தில் வாளேந்தி வீசுவதைக் காட்டிலும் ஆலயத் திருப்பணியில் கல்லுளி கொண்டு வேலை செய்வதற்கு அதிகம் ஆசைப்படுகிறார்!"

"மதுராந்தகனோ இராஜ்யம் ஆளுவதில் தீவிர நோக்கம் கொண்டிருக்கிறான்.


ஆடு புலியாக மாறுகிறது. புலி ஆடாகிறது. இறை வன் நரியைப் பரியாக்கிப் பரியை நரியாக்கியதாகச் சிவ பக்தரின் வரலாறு கூறுகிறது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அலட்சியத்திற்கு கிடைத்த பரிசு



ஒரு நாள் முல்லா அயல் ஊருக்கு சென்றிருந்தார். அந்த ஊரில் பொதுமக்கள் குளிப்பதற்காகவே ஒரு பொதுக் குளியல் அறை ஒன்று இருந்தது.

முல்லா அழுக்கான ஆடையுடன் அங்கே குளிப் பதற்காகச் சென்றார்.

அங்கிருந்த வேலைக்காரர்கள் முல்லாவை சரியாகக் கவனிக்காமல் அலட்சியமாக நடத்தினர். முல்லாவை சீக்கிரம் குளித்து விட்டுச் செல்லுமாறு அவசரப்படுத்தினர்.

குளித்து முடித்து விட்டு வெளியே வந்த முல்லா வேலைக்காரர் ஒவ்வொருவருக்கும் ஆளுக்கு ஒரு தங்கக் காசை அன்பளிப்பாகக் கொடுத்தார்.

அதைக் கண்ட வேலைக்காரர்கள், இவர் பெரிய செல்வந்தர் என்பதை முன்னதாகவே தெரிந்து அவரை நன்கு கவனித்து உபசாரம் செய்திருந்தால் இன்னும் நிறைய தங்கக் காசுகள் கொடுத்திருப்பார் என்று நினைத்தனர்.

இரண்டு நாட்கள் கழித்து முல்லா மறுபடியும் அந்த குளியல் அறைக்கு குளிக்கச் சென்றார்.

வேலைக்காரர் கள் முல்லாவை அடையாளம் கண்டு கொண்டு போட்டி போட்டுக் கொண்டு முல்லா தேய்த்துக் கொள்ள நறுமணப் பொடிகள், வாசனைப் பன்னீர், உடல் துவட்ட உயர் தரமான துவாலை, உடலில் பூசிக்கொள்ள வாசனை திரவியங்கள் கொடுத்து ராஜ உபசாரம் செய்தனர்.

அன்றைய தினம் முல்லா தங்கள் அனைவருக்கும் ஆளுக்கு ஐந்து பொற்காசுகளாவது நிச்சயம் அன்பளிப்பாக கொடுப்பார் என்று வேலைக்காரர்கள் எதிர்பார்த்தனர். முல்லா ஆளுக்கு ஒரு செப்பு காசு மட்டும் தான் கொடுத்தார்.

இவ்வளவு சிரமப்பட்டு உங்களுக்கு உபசாரம் செய்ததற்கு இந்த செப்பு காசு தானா பரிசு? என்று கேட்டனர். முல்லா அன்றைய தினம் நான் உங்களுக்கு அளித்த பொற்காசு இன்று நீங்கள் செய்த உபசாரத்திற்கான பரிசு. இன்று கொடுப்பதோ அன்று நீங்கள் என்னை அலட்சியப்படுத்தியமைக்காகக் கொடுத்த பரிசு என்று கூறியவாறே குளியலறையை விட்டு வெளியே நடந்தார்.

நீதி: பலனை எதிர்பார்க்காமல் உதவி செய்தால் பலன் கிடைக்கும். பலனை எதிர்பார்த்து செய்தால் ஏமாற்றம் தான் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு மற்றும் உண்மையின் விழிப்புணர்வை ஏற்படுத்தி பிறரின் வாழ்வை ஒளிரச் செய்வோம்.

~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதியுடன் பேசுவதற்கு பொதுக்கட்டமைப்பு தேவை

இலங்கைத் திருநாட்டின் 10ஆவது பாராளுமன்றம் நேற்றுக் கூடியது. அதில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் கொள்கைப் பிரகடன உரை இடம்பெற்றது.

ஜனாதிபதியின் உரையின் சிறப்பம்சம் இனவாத அரசியலுக்கு இனி இம்மியும் இடமில்லை என்பதாகும்.

ஆம், இலங்கையின் பேரழிவுக்கும் பெருந் துன்பத்துக்கும் இனவாதமே மூலகாரணமாக இருந்துள்ளது.

ஆக, இனவாதம் என்ற பெரு நோயை இல்லாதொழிக்காவிடில், இந்த நாடு பேரழிவை எதிர்கொள்வது தவிர்க்கமுடியாததாகும்.

இந்நிலையில்தான் சிங்கள மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

அதிலும் இஃது அரைகுறையான ஆட்சி மாற்றமன்று. மாறாக, மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் அந்த ஆட்சி மாற்றத்தை ஒட்டுமொத்தச் சிங்கள மக்களும் ஏற்படுத்தியுள்ளனர்.

அதுதவிர, சரத் வீரசேகர போன்ற பேரினவாதிகளை சிங்கள மக்கள் அரசியலில் இருந்து ஓரங்கட்டியுள்ளனர்.

அதேநேரம் சிங்கள மக்கள் மேற்கொண்ட ஆட்சி மாற்றத்தை தமிழ் மக்களும் ஆமோதித்துள்ளனர்.

இந் நிலையிலேயே இனவாத அரசியலுக்கு இம்மியும் இடமில்லை என்று கூறிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க; மதவாதத்துக்கும் இனி இடமில்லை என்பதைத் தெட்டத்தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

இங்குதான் ஓர் விடயத்தை நாம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

அதாவது, பெளத்த மதத்துக்கு முன்னுரிமை என்பதுதான் இந்த நாட்டின் மரபு வழி அரசியலாக இருந்து வருகிறது.

இந்த அடிப்படையிலேயே இலங்கை பெளத்த சிங்கள நாடு என்ற பேரினவாத இருள் இலங்கையைச் சூழ்ந்திருந்தது.

தவிர, பெளத்த மதவாதம் இம்மியும் தேயாத வகையில் பெளத்த சிங்கள பீடங்கள் அதனைக் கட்டிக் காத்து வந்தன.

இருந்தும் இளம் பெளத்த துறவிகள் மதவாதத்தை எதிர்ப்பது தெரிகின்றது.

ஆம், பெளத்த மதவாதத்தால் இந்த நாட்டில் மனித வதை இடம்பெறுவதை அந்த புனிதமான இளம் பெளத்த துறவிகள் விரும்பவில்லை.

இத்தகையவர்கள் ஜனாதிபதி அநுர குமாரவின் கரங்களைப் பலப்படுத்த முற்பட்டுள்ளமை தெட்டத்தெளிவாகிறது.

இதன் ஓர் அறிகுறியே அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்கும்போது தேசிய கீதம் இசைக்கப்பட்ட வேளையில், வழமைக்கு மாறாக பெளத்த பிக்குகள் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர்.

எனவே இன, மத வாதத்துக்கு இம்மியும் இடமில்லை என்று தனது கொள்கைப் பிரகடன உரையில் கூறிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுடன் இனப்பிரச்சினை உள்ளிட்ட தமிழினம் சார்ந்த அனைத்து விவகாரங்கள் தொடர்பிலும் பேசுவதற்கென தமிழ்ப் பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

இத் தமிழ்ப் பொதுக்கட்டமைப்பில் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகள், தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதிகள், புத்திஜீவிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், சட்டவாளர்கள், புலம்பெயர் அமைப்புகளின் பிரதிநிதிகள் இடம்பெற வேண்டும்.

இக்கட்டமைப்பில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட குழுவே ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக இருப்பது மிகமிக அவசியம்.

---

### வடக்கில் காணிகள் விரைவில் விடுவிக்கப்படும்

# அரசியல் கைதிகள் தொடர்பிலான பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்

## தேசிய மக்கள் சக்தியின் எம்.பி சதுரங்க அபேசிங்க

(கொழும்பு)

வடக்கில் விடுக்கப்படாத காணிகளை மிக விரைவாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், அரசியல் கைதிகள் தொடர்பிலான பிரச்சினைக்கும் தீர்வு காணப்படும் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சதுரங்க அபேசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களின் சுமைகளைக் குறைப்பதே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதன்மையான நோக்கமாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கருத்து வெளியிடுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், வடக்கு மற்றும் மலையக மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

கடந்த கால அரசாங்கங்கள் இவர்களது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை வழங்கவில்லை.

இவர்களது பிரச்சினைகள் தீர்க்கப்படாதுள்ளமையானது நாட்டுக்கு மிகப் பெரிய சுமையாகும்.

காணிகளை விடுவிக்குமாறு இந்த மக்கள் நீண்டகாலமாக கோரி வருகின்றனர்.

எவ்வித வழக்குகளும் இல்லாது அரசியல் கைதிகளை நீண்டகாலமாகத் தடுத்து வைத்துள்ளனர்.

இந்தப் பிரச்சினைகளை மிக விரைவாக தீர்க்கும் தேவை அரசாங்கத்துக்கு உள்ளது.

எனவே, வடக்கு மக்களின் காணிப் பிரச்சினை என்பது நீண்டகாலமாக தீர்க்கப்படாதுள்ள பிரச்சினை என்பதுடன், விரைவாகத் தீர்க்க வேண்டிய பிரச்சினையுமாகும். நாம் அதனை வேகமாகச் செய்வோம்.

யுத்தத்தின் பின்னர் மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ என அனைவருக்கும் பாரிய மக்கள் ஆணைகள் கிடைக்கப் பெற்றன.

ஆனால், நாட்டு மக்களின் பிரச்சினைகளை எவராலும் தீர்க்க முடியாது போனது. நாம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவே வந்துள்ளோம்.

அதனால் அந்தப் பணியை நிச்சயமாக செய்வோம் என சதுரங்க அபே சிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

---

# இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று (21) சற்று அதிகரித்துள்ளது.

அதற்கமைய அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவுப் பெறுமதி 286 ரூபா 54 சதம், விற்பனைப் பெறுமதி 295 ரூபா 55 சதம்.

நேற்று முன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனைப் பெறுமதியானது முறையே 286.55 ரூபாவாகவும், 295.59 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது. (ம-7)

---

# இலங்கையில் குவியும் இந்திய சுற்றுலாவிகள்

(கொழும்பு)

இலங்கைக்கு 2024 நவம்பர் மாதத்தின் முதல் 17 நாட்களில் ஒரு இலட்சத்து 3 ஆயிரத்து 315 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளதாகவும் அவர்களின் மொத்த எண்ணிக்கை 23 ஆயிரத்து 660 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் ரஷ்யாவிலிருந்து 16 ஆயிரத்து 602 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனியிலிருந்து 7 ஆயிரத்து 776 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

மேலும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 6 ஆயிரத்து 611 சுற்றுலாப் பயணிகளும், அவுஸ்திரேலியாவிலிருந்து 4 ஆயிரத்து 52 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 17 இலட்சத்து 24 ஆயிரத்து 30 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

2023 ஆம் ஆண்டில் 14 இலட்சத்து 87 ஆயிரத்து 303 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

---

# துப்பாக்கிச் சூடு ஒருவர் உயிரிழப்பு

மாத்தறை, திக்வெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வலஸ்கல பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று (21) அதிகாலை 5.30 மணியளவில் வலஸ்கல பகுதியில் அமைந்துள்ள கால்நடை வைத்தியர் அலுவலகத்திற்கு அருகில் குறித்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவரை இலக்கு வைத்தே இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் 48 வயதுடைய வலஸ்கல பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டினை நடத்தியவர் அல்லது துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இன்னும் கண்டறியப்படாத நிலையில், திக்வெல்ல பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

---

# வாகன விபத்து ஒருவர் மரணம்

(கொழும்பு)

பன்னல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்னல தங்கொட்டுவ வீதியின் சந்தலங்காவ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயரிழந்தார்.

தங்கொட்டுவவில் இருந்து பன்னல நோக்கி பயணித்த லொறியொன்று வீதியோரத்தில் வீழ்ந்து கிடந்த நபரொருவர் மீது மோதிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த நபர் சந்தலங்காவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் உயிரிழந்தார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் 70 வயதுடைய சிங்கக்குளிய, யோகியான பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

சடலம் தற்போது மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளதோடு, பன்னல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

---

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை 01 - 30, 2024**

**"இயற்கையே எனது இறைவன். எனக்கு இயற்கை புனிதமானது. மரங்கள் என் கோயில்கள், காடுகள் என் தேவாலயங்கள்."**

மிகைல் கொர்பச்சேவ்
(சோவியத் யூனியனின் முன்னாள் அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு
# விசேட செயலமர்வு

(கொழும்பு)

புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிர்வரும் 25, 26 மற்றும் 27ஆம் திகதிகளில் விசேட செயலமர்வு ஒன்று நடைபெற உள்ளது என பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷாணி ரோகினதீர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற செயன்முறைகள், நிர்வாக நடவடிக்கைகள் போன்றவை குறித்து இந்தச் செயலமர்வில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தப்பட உள்ளது. மேலும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தேவையான முக்கிய தகவல்கள் அனைத்தும் குறித்த தினத்தில் வழங்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-8)

# பொருத்தமான சலுகைகள் பெற்றுக்கொள்ளப்படும்
## ஹிருனி தெரிவிப்பு

(கொழும்பு)

தேவையான மற்றும் பொருத்தமான சலுகைகள் பெற்றுக்கொள்ளப்படும் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருனி விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் பெற்றுக்கொள்ளப்படாது என தமது கட்சியின் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும் தேவையான சலுகைகளைப் பெற்றுக் கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றைப் பார்வையிடச் சென்றிருந்த போது அவர் ஊடகங்களிடம் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இம்முறை பாராளுமன்றில் கூடுதல் எண்ணிக்கையிலான பெண்கள் அங்கம் வகிப்பது ஆரோக்கியமான விடயம்.

குறிப்பாக வாரிசு அரசியல் அன்றி பெண்கள் பாராளுமன்றைப் பிரதிநிதித்துவம் செய்வது மகிழ்ச்சி அளிப்பதாகத் தெரிவித்துள்ளார். (நி-8)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 150 | 150 | 100-120 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 200 | 190 |
| பச்சைமிளகாய் | 350 | 250 | 250 | 200-220 |
| தக்காளி | 200 | 350 | 350 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 220 | 250 | 100-120 |
| கோவா | 200 | 200 | 250 | 200 |
| கரட் | 150 | 200 | 250 | 150 |
| பூசணி | 100 | 120 | 100 | 100 |
| புடோல் | 120 | 120 | 150 | 200 |
| வாழைக்காய் | 100 | 80 | 150 | 60 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 300 | 150-400 |
| பெரிய வெங்காயம் | 350 | 300 | 250 | 320 |
| பாகற்காய் | 600 | 550 | 650 | 500 |
| வெண்டக்காய் | 120 | 120 | 150 | 80 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 150 | 140 |
| பயற்றங்காய் | 400 | 300 | 250 | 200-250 |
| லீக்ஸ் | 180 | 250 | 250 | 200 |
| பீற்றூட் | 140 | 200 | 250 | 100 |
| கறிமிளகாய் | 500 | 600 | 600 | 450 |
| முருங்கைக்காய் | 600 | 650 | 400 | 300 |
| போஞ்சி | 400 | 450 | 500 | 450 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 150 | -- |
| கீரை - 1 பிடி | 80 | 140 | 150 | 60-80 |
| தேசிக்காய் | 500 | 700 | 800 | 600-700 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 80-170 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 720 |
| வெங்காயப்பூ | -- | 450 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 100 | 90 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 200 | 100 | -- |

# இன்று ஒரு தகவல் 270



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# உத்தவ கீதை

அர்ச்சுனன் கேட்ட கேள்விக்கெல்லாம் பகவான் கண்ணன் பதில் சொன்னார். அதற்கு பெயர் பகவத்கீதை. அதே மாதிரி உத்தவன் கேட்ட கேள்விக்கும் அவர் பதில் சொல்லியிருக்கின்றார். அதற்குப் பெயர் உத்தவ கீதை.அது சரி உத்தவன் யார்? கண்ணனுக்கு சிறிய வயதிலிருந்தே தேரோட்டிக் கொண்டிருந்தவன் அவன் தான். குருசேத்திரப் போர் முடிந்தது. அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டி தருமருக்கு முடிசூட்டினார் கண்ணபிரான். அதன் பின் துவாரகைக்கு திரும்பினார். தான் வந்த காரியம் முடிந்தது. அதனாலே இளமையிலிருந்தே தனக்கு தேரோட்டியாக இருந்து வந்த உத்தவனைக் கூப்பிட்டார். உனக்கு வேண்டும் என்பதைக் கேள் என்றார்.

அவன் தனக்கென்று எதையும் கேட்க ஆசைப்படவில்லை. இருந்தாலும் கேள்வி கேட்பதிலே அவன் கெட்டிக்காரன். அதனாலே கேட்க ஆரம்பித்தான். பரந்தாமா! இராஜசூய யாகத்திற்கு தருமனைக் கூப்பிட்டு தன் அரண்மனையிலே விருந்து வைத்தான் துரியோதனன். அதன்பின் சூதாட்டத்திற்கு கூப்பிட்டான். தருமன் தோல்வியடைகின்ற மாதிரி செய்து விட்டான். நீங்கள் தான் முக்காலமும் உணர்ந்தவராயிற்றே. சூதாட்டத்திலே தருமர் ஜெயிக்கின்ற மாதிரி செய்திருக்கக் கூடாதா? பகடைக்காய் உருட்டுகின்ற போது நீங்கள் எதிர்பார்த்தது விழுகின்ற மாதிரி செய்திருக்கலாமே. சரி அது தான் இல்லை. வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் இவர்களை பணயம் வைத்து ஆடுகின்றபோதாவது காப்பாற்றியிருக்கலாம். அதையும் நீங்கள் செய்யவில்லை. பாவம் அந்த அபலைப்பெண். ஒன்றும் அறியாத உன் சகோதரி திரௌபதி.

அவள் அதிஷ்டக்காரி .அவளை பணயம் வைத்து ஆடு. ஜெயித்து விட்டால் இழந்த நகரங்களையெல்லாம் திருப்பி கொடுத்து விடுகின்றேன் என்கின்றான் துரியோதனன். அந்தச் சமயத்திலேயாவது பாண்டவர் களுக்கு வெற்றி கிடைக் கின்ற மாதிரி செய்திருக்கக் கூடாதா? அப்போது எல்லாம் சும்மா இருந்து விட்டு அந்தப் பெண்ணைத் துச்சாதனன் இழுத்துக் கொண்டு வந்து துயில் உரிகின்ற கட்டத்திலே காப்பாற்றினாயே இது நியாயமா? முறையா? அறமா? இது தான் உத்தவன் கேட்ட கேள்வி.

இதற்கு பரந்தாமன் பதில் சொல்கின்றார். அப்படிக் கேள் உத்தவா! தருமனை துரியோதனன் சூதாட அழைக்கும் போது என்ன சொன்னான்? நான் பணயம் வைக்கின்றேன். எனக்குப் பதிலாக என் மாமா சகுனி பகடைக் காய்களை உருட்டுவார் என்று சொன்னான். உடனே தருமன் என்ன சொல்லி யிருக்கலாம். எனக்குப் பதிலாக என் மைத்துனன் கண்ணன் பகடைக் காய்களை உருட்டுவான் என்று சொல்லியிருக்கலாமே. அப்படிச் சொல்லவில்லை. என்ன செய்தான் தெரியுமா? துரியோதனன் கூட சூதாட்டத்திற்கு சம்மதித்து விட்டோம். கடவுளே! அது என் மைத்துனன் கண்ணபிரானுக்கு தெரியக்கூடாது என்று வேண்டிக்கொண்டான். இதனாலே தருமன் மனதாலே எனக்கு தடை போட்டு விட்டான். அதனாலே அரண்மனைக்கு வெளியிலே என்னைக் கூப்பிடுவார்கள் என்று காத்துக்கொண்டிருந்தேன். பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன், திரௌபதி இவர்களை பணயம் வைத்து ஆடுகின்ற போதாவது கூப்பிடுவார்கள் என்று பார்த்தேன். அப்போதும் அவர்கள் என்னை நினைக் கவில்லை.

திரௌபதியைத் துச்சாதனன் கூந்தலைப் பிடித்து இழுக்கின்றான். அப்போது கூட அவன் தன்னுடைய உடல் பலத்தாலே தடுக்க முயற்சி செய்தானே தவிர என்னை நினைக்கவில்லை. துரியோதனன் சபைக்கு இழுத்துச் செல்லப்பட்ட திரௌபதி அறநூல்களையும் அரச நீதியையும் சொல்லிக்கொண்டிருந்தாலே தவிர என்னை நினைக்கவில்லை. துகில் உரிகின்ற கட்டத்திலே தான் ஹரி ஹரி கண்ணா! பரந்தாமா! என்று கூப்பிட்டாள். அதனாலே தான் அப்போது போய் நான் காப்பாற்றினேன் என்றார் பரந்தாமர்.

அப்படி என்றால் நீ அழைத்தால் தான் போவாயா? நீயாக போக மாட்டாயா? என்று கேட்டான் உத்தவன். ஆமாம் நான் அழைத்தால் தான் போவேன். மனிதர்கள் செய்யக்கூடிய செயல்களை யெல்லாம் அவர் அவர் போக்கிலேயே விட்டு விட்டு பார்த்துக் கொண்டிருப்பேன். நான் குறுக்கிட்டு ஒன்றுமே செய்ய மாட்டேன் என்றார் பரந்தாமர். மனிதன் தவறு செய்தால் திருத்தமாட்டாயா? சும்மா பார்த்துக் கொண்டு தான் இருப்பாயா? என்று கேட்டான் உத்தவன். நான் மனிதனது உள்ளத் திலே இருக்கின்ற போது என் எதிரிலே மனிதன் தவறு செய்ய மாட்டான் என்றார் கண்ணன்.

யார் நினைக்கின்றார்களோ அவர்கள் உள்ளத்திலேயெல்லாம் அவன் இருக்கின்றான். அப்படி இருக்கின்ற போது தவறு செய்ய மனிதன் அஞ்சுவான். இது தான் சார் உத்தவகீதை. இந்தக் காலத்திலே சில பேர் பகவான் மாதிரி அடுத்தவன் கஷ்டப்படுவதைப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் உண்டு. அன்றைக்கு அப்படித்தான் சார். நடுத் தெருவிலே ஒரு திருடனைப் பிடித்து எல்லோரும் சேர்ந்து அடித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு ஆள் மட்டும் தள்ளி நின்று அதை வேடிக்கை பார்த்து சிரித்துக் கொண்டிருந்தான். என்ன சார் இது பாவம் அந்த ஆளைப்போட்டு இப்படி அடிக்கின்றார்களே என்றார். என்ன சார் நான் ஒருத்தன் பையிலே இருந்த பர்ஸை எடுப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தேன். அதற்குள்ளே அவன் முந்திக்கொண்டு அதை எடுத்து விட்டானே. பார்ப்பது நான் எடுப்பது அவனா? என்ன சார் நியாயம் இது? நல்லா வாங்கட்டும் என்றான்.

பரந்தாமன் தான் இந்த உலகத்தை காப்பாற்ற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை - இந்...

உரிய நடவடிக்கை எடுக்கும் என கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரைக்கு பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினை தொடர்ந்து பெரும் இழுபறியாக உள்ளது. அதனால் எமது மீனவர்களே பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். அரசாங்கம் எமது நாட்டு மீனவர்களை பாதுகாக்க உறுதியான நடவடிக்கை எடுக்கும். அதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு நாம் ஒருபோதும் பின்னிற்கப் போவதில்லை.

மிக விரைவில் இந்திய உயர்ஸ்தானிகரைச் சந்திக்க இருக்கிறேன். அதன்போது இந்தப் பிரச்சினை தொடர்பில் அவருடன் விரிவாகக் கலந்துரையாட எதிர்பார்க்கிறேன்.

அதற்கு முன்பதாக வடக்கு மீனவர்கள் மற்றும் துறை சார்ந்த அனைத்து தரப்புடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் என்றார். (ம-7)

## சர்ச்சையைக்...

மன்றத்தின் முதலாவது அமர்வு, நேற்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமானது. அதற்கு முன்னதாகவே பாராளுமன்ற உறுப்பினர்கள் சபைக்குள் பிரவேசித்தனர்.

புதிய அமர்வில் எம்.பிக்கள் எங்கு வேண்டுமானாலும் அமர நேற்று வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தநிலையில், யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா சபைக்குள் எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனத்தில் அமர்ந்திருந்தார்.

இதனையடுத்து எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனத்திலிருந்து எழுந்திருக்குமாறு பணியாளர்கள் கூற, அப்படி எங்கே எழுதியுள்ளது என வைத்தியர் அர்ச்சுனா கேள்வி எழுப்பியுள்ளார்.

புதிய அமர்வில் எம்.பிக்கள் எங்கு வேண்டுமானாலும் அமரலாம். ஆனால் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆசனங்களுக்கு வரையறை உள்ளது. சம்பிரதாயம் உள்ளது. என்று பாராளுமன்றப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர் , சம்பிரதாயத்தை மாற்றத்தானே இங்கு வந்திருக்கிறேன் எனப் பதிலளித்துள்ளார் அர்ச்சுனா.

இருந்தும் ஆசனத்தை கைவிடுமாறு பணியாளர் வற்புறுத்திய போதும் தொடர்ந்து மறுத்ததால் அந்தப் பணியாளர் அங்கிருந்து சென்று விட்டார்.

நேற்று எதிர்க்கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவர் இருக்கையில் அமராமல் வேறு ஆசனத்தில் அமர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மோ.சைக்கிள்...

உயிரிழந்தவராவார்.

கடந்த மாதம் 29 ஆம் திகதி காலை 7.30 மணியளவில் அவர் வட்டுக் கோட்டையில் இருந்து சித்தங்கேணி நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது எதிர்ப்பக்கமாக மோட்டார் சைக்கிள் ஒன்றை முந்திச் சென்ற கார் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு முன்பாக அவர் மீது மோதியுள்ளது.

இதில் படுகாயங்களுக்குள்ளான அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## இஸ்ரேலிய...

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிற்கு பிடியாணை பிறப்பித்துள்ளது.

போர்க்குற்றம் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டதாக அவர் மீது குற்றம் சாட்டி இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நெதன்யாகுவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட் மற்றும் ஹமாஸின் இராணுவத் தளபதி முகமது டெய்ஃப் ஆகியோரைக் கைது செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க் குற்றங்களுக்காக, குறைந்தபட்சம் 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 8ஆம் திகதி முதல் குறைந்தபட்சம் 2024ஆம் ஆண்டு மே 20ஆம் திகதி வரை, வழக்குத் தொடரின் பிடியாணைகளுக்கான விண்ணப்பங்களைத் தாக்கல் செய்த நாள் வரை, பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் யோவ் கேலண்ட் ஆகிய இரு நபர்களுக்கு பிடியாணைகள் வழங்கப்பட்டன. (ம-7)

## தமிழ் மக்களின்...

இந்திய உயர்ஸ்தானிகருடன் தமிழரசுக் கட்சியின் எம்.பிக்கள் கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுவினர் நேற்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜாவை கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு மற்றும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலான இந்திய அரசின் எதிர்காலச் செயற்பாடுகள், பங்களிப்புத் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இச்சந்திப்பில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமாகிய சிவஞானம் ஸ்ரீதரன், கட்சியின் பாராளுமன்ற குழுவின் கொரடாவும், பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமாகிய மருத்துவர் ப.சத்தியலிங்கம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய இரா.சாணக்கியன், ஞா.ஸ்ரீநேசன், ச.குகதாசன், க.கோடீஸ்வரன், து.ரவிகரன், இ.சிறிநாத் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,250)

## ஆளு...

செயலகத்தில் குறித்த கூட்டம் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண பிரதம செயலர், மாவட்ட செயலர்கள், உள்ளூராட்சி அமைச்சின் செயலர், உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர், இலங்கை மின்சார சபையின் பிராந்திய முகாமையாளர், யாழ்.மாநகர சபை ஆணையாளர், வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர், இராணுவக் கட்டளைத் தளபதி, கடற்படைத் தளபதி ஆகியோர் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றவுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை மற்றும் எதிர்வுகூறப்பட்டுள்ள, வளிமண்டலக் குழப்பத்தால் ஏற்படும் பாதிப்புக்களைத் தணிப்பது தொடர்பில் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது. (ம-7)

## வங்...

தென்மேற்கு வங்கக்கடலில் காற்றமுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக வளிமண்டலவியல்திணைக்களத்தினால் வெளியிடப்படும் எதிர்கால முன்னறிவிப்புகள் மற்றும் அறிவிப்புகள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இதனால் வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில்அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

மாலை அல்லது இரவுவேளையில் தீவின்ஏனைய பகுதிகளில் பல இடங்களில்மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.11.21
சீட்டிழுப்பு இலக்கம் 5662
Q 8 2 1 1 6 2
அத சம்பத Q 1 1 6 2
சீட்டிழுப்பு இலக்கம் 237
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.11.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1692
P 11 34 41 67 P
Double Chance 86558

மெகா பவர்
திகதி 21/11/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2010
M 10 28 30 51 78
Double Chance 102255

லக்கி 7 VIP
திகதி 2024.11.21
சீட்டிழுப்பு இலக்கம் 0488
R 3 1 2 6 3 5 R

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3904
சீட்டிழுப்பு திகதி 21.11.2024
S 13 21 76 79
S 072526
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.11.21
சீட்டிழுப்பு இலக்கம் 971
மிதுனம் 02 15 20 45 மிதுனம்
078890 17

உத்தியோகபூர்வ முடிவுகள்
21.11.2024 வெற்றி வாரம் 370
ஆங்கில எழுத்து A
மற்றும் வெற்றி இலக்கம் 9 3 4 1 4 5
68932
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,930,268.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2636
சீட்டிழுப்பு திகதி 2024.11.21 தினம் வியாழக்கிழமை
08 39 53 72 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,728,561.60
DLB

சனிதா
திகதி 21.11.2024 வெற்றி வாரம் 4797
04 56 59 69 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,941,992.00
ரூ.100,000/- 33659
DLB

சசிரி
வெற்றி வாரம் 561
சீட்டிழுப்பு திகதி 21.11.2024 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 15 26 45
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4348
சீட்டிழுப்பு திகதி 21.11.2024 தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 10 30 34 39 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,724,022.40
107800
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 09 10 44 50 58
சீட்டிழுப்பு வாரம் 1812
21.11.2024 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.555,996,825.60
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2462
சீட்டிழுப்பு திகதி : 2024.11.21
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.83,921,480.80
26 29 47 69 E
ரூ.100,000/- 769965
DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கனடா நிரந்தர குடியுரிமை- பராமரிப்பாளர் -கருத்தரங்கு

கனடாவில் குடும்பத்துடன் நிரந்தரமாக வாழக்கூடிய வீட்டு உதவியாளர் (HOME SUPPORT WORKER), குழந்தை பராமரிப்பாளர் (HOME CHILD CARE PROVIDER) ஆகிய குடிவரவு திட்டங்களுக்கான கல்வி மற்றும் தயார்படுத்தலுக்கான கருத்தரங்கு

(C-1629)



மற்றும் ஜேர்மனி, UK, மத்திய நாடுகள், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் CARE GIVER ஆக வேலை செய்ய விரும்புபவர்களும் கலந்து கொள்ளலாம்.
இலங்கையிலேயே CARE GIVER கல்வியினை கற்று 50,000க்கு மேற்பட்ட சம்பளத்துடன் வேலையும் பெற்றுக்கொள்ளலாம்.

- வயதெல்லை- 17 முதல் 50 வரை
- கல்வித்தகுதி- அடிப்படைக்கல்வி அவசியம்
- ஆண்,பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம்

அனுமதிக்கட்டணம் 1000/=

CIMS இல.49, சப்பல் லேன், யாழ்ப்பாணம் (யாழ் மத்திய கல்லூரி அருகில்) 0777068777/ 0777719322

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டப் பகுதியில் இரண்டு பரப்பு பெறுமதியான நிலத்துடன் முழுவதும் மாபிள் பதிக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட அதி சொகுசு வசதிகளுடன் ஆறு அறைகள் கொண்ட மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

(2481)

மேலதிக தகவல்களுக்கு அழைக்கவும் :

077 391 2298/ 076 009 8661

## கண்ணீர் அஞ்சலி



நண்பியாகிய Dr. விஜயரூபியின் அன்புத் தந்தையும் மற்றும் என் அன்பான நண்பன் Dr. பிரசன்னாவின் அன்பு மாமனாருமாகிய

அமரர் Dr. செல்லத்துரை செல்வமகேந்திரன்
( சித்த ஆயுள்வேத வைத்தியர் )

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிறப்பு 22.10.1950
இறப்பு 21.11.2024

பிரிவால் துயருறும்

பரிமளம் ஆயுள்வேத வைத்திய நிலையம்,
மாவிட்டபுரம், இலங்கை.
North york canada

KMVR ஆயுள்வேத மருந்துக்கடை,
KKS வீதி, மாவிட்டபுரம்.

(C-1630)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 31.03.1939
மறைவு 23.10.2024

கடந்த 23.10.2024 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் கோபாலசிங்கம் சரஸ்வதி

திதி : ஐப்பசி மாத தேய்பிறை ஸப்தமி

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 22.11.2024 இன்று வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

(538)

இல. 34, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.

தகவல் :
குடும்பத்தினர்

# இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளராக ஸ்ரீநேசன்

(கொழும்பு)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளராக, மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

10 வது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு நடை பெற்று முடிந்ததைத் தொடர்ந்து, தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழு நேற்று பாராளுமன்ற நூலகக் கட்டடத்தில் கூடியது.

தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுவின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்களது தலைமையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில், கட்சியின் ஊடகப் பேச்சாளராக பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் அவர்களை சிவஞானம் சிறீதரன் முன்மொழிந்திருந்ததுடன், சண்முகம் குகதாசன் அவர்கள் வழிமொழிந்திருந்தார்.

தமிழரசின் பாராளுமன்றக் குழுவின் அறிக்கையிடும் செயலாளராக பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் அவர்கள், மருத்துவர் இளையதம்பி ஸ்ரீநாத் அவர்களால் முன்மொழியப்பட, அதனை ஞானமுத்து ஸ்ரீநேசன் அவர்கள் வழிமொழிந்திருந்தார்.

இக்கூட்டத்தின் போது, தமிழரசுக் கட்சியாக ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடுவதென்றும், அதற்கான வரைவுகளை முறையாகத் தயாரித்து, திட்டமிட்டதுப், ஆக்கபூர்வமானதுமான சந்திப்பை மேற்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (ம-7)

## மொத்தக் கொள்வனவு

அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள்.

(566)



48/= ~~80/=~~

ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்

077 780 8030

## வைத்தியம்

வலிப்பு நோய் | கை விறைப்பு
கழுத்து வலி | கால் பாத விறைப்பு |
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669

(565)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 24.10.2024 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு

### அமரர் சிவசுப்பிரமணியம் பத்மாவதி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 23.11.2024 சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்படும். அன்றைய தினம் பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய, சபிண்டீகரண மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தங்களைக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

சந்தை வீதி, உடுப்பிட்டி,
077 891 7611

இங்ஙனம்
குடும்பத்தினர்

(C-1628)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிரவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.